ஈமானின் வசந்தம்

வாழ்க்கையின் மகிழ்ச்சிகள் மற்றும் நற்பேறு ஒவ்வொருவருடைய மனதிலும் இருக்கும் ஒரு ஆசையாகும். ஒவ்வொரு மனிதனும் வெற்றியும் மனநிறைவும் நற்பேறும் தனக்கே வந்து சேரவேண்டும் என்றே நினைக்கிறான். வாழ்க்கையின் வெற்றி என்ற வகையில் ஒவ்வொருவருக்கும் ஒரு தனிப்பட்ட கோணத்திலான பார்வையும் அணுகுமுறையும் இருக்கும். சிலர் பெருமளவில் பொருள் சம்பாதித்து சேர்த்து வைப்பதையே வெற்றி எனக் கருதுவார்கள், சிலர் உயர்ந்த பதவிகளை வகிப்பதை வெற்றியாகக் கருதுகின்றனர். மேலும் சிலர், மிக அதிகமான சக்தியும் ஆற்றலும், ஆட்சி அதிகாரம் கிடைத்துவிடுமானால் அதுவே மிகப்பெரும் வெற்றியாக நினைக்கின்றனர். ஆனால், சில அல்லாஹ்வின் அடியார்களுடைய சிந்தனைகள் இதைவிட உயர்வானதாகவும் அவர்களுடைய கூர்நோக்கு இந்த அகிலங்களின் எல்லைகளையும் தாண்டி அங்கே அவர்கள் வெற்றியைக் காண்கின்றனர். அவர்களுடைய பார்வையில் இந்த சாதாரண உலகத்திலுள்ள பொருட்கள் ஒரு காய்ந்த வைக்கோலுக்குச் சமமான மதிப்பையும் பெறுவதில்லை. அல்லாஹ்வின் இத்தகைய அடியார்களில் ஒருவர் இருந்தார், அவரை இந்த உலகம் ஹஜ்ரத் பிலால் ஹபஷி (ர) என்று அழைக்கின்றது. ஹஜ்ரத் பிலால் (ர) அவர்கள் தன்னுடைய வாழ்க்கையின் மகிழ்ச்சிகள் மற்றும் நற்பேறு ஈமான் பெற்று விளங்கியதுதான் என்று கருதுகிறார்கள். இந்த உலகின் பெருமைக்குரிய விஷயங்கள், பொருட்செல்வம் அந்தஸ்து மற்றும் கண்ணியம் அனைத்தையும் புறக்கணித்தவராக அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதர் அவர்களின்மீது ஈமான் கொண்டதை அவர்கள் வாழ்க்கையின் மாபெரும் வெற்றியாகக் கருதுகிறார்கள். இதனை அவர்கள் எந்த அளவிற்கு பெருமையுடன் பிரகடனம் செய்துள்ளார்கள் என்றால் அன்றிலிருந்து இன்று வரைக்கும் அவர்களுடைய இந்த அறிவிப்பு உலகெங்கிலும் பிரதிபலித்துக்கொண்டிருக்கின்றது. நிர்ப்பந்தங்களுக்கு ஆளாக்கப்பட்டு வேறுவழியின்றித் தவித்த அடிமையான ஹஜ்ரத் பிலால் (ர) அவர்கள் ஆடைகள் அகற்றப்பட்டு சுட்டெரிக்கும் மணலில் கொட்டும் வெயிலில் கிடக்கின்றார்கள், சாட்டையால் அடிக்கப்பட்ட உடம்பெல்லாம் இரத்தம் சொட்டுகின்றது. அவருடைய எதிரிகள் தோற்று சோர்ந்துவிடுகின்றனர், ஆனால், ஹஜ்ரத் பிலால் (ர) அவர்கள் லாத், உஜ்ஸா மற்றும் ஹுபல் ஆகிய விக்கிரகங்களை உறுதியாக நிராகரிக்கின்றார்கள். அவர்கள் படைப்புகளான எவையும் படைப்புகளின் இரட்சகனாக நம்பப்படுவதை முற்றிலும் நிராகரிக்கின்றார்கள், மறுமையின் விசாலமான எல்லையற்ற வாழ்க்கைக்கு இவ்வுலகின் நெருக்கடியான, நிர்ப்பந்தமான நிலையின் மீது முக்கியத்துவமும் முன்னுரிமையும் அளித்தார்கள். இவருடைய இந்த சிந்தனை ஒரு கோஷமாகவும் கூக்குரலாகவும் மாறிவிடுகிறது. அஹத், அஹத் என்ற இறைவன் ஒருவனே எனும் பிரகடனத்தையும் கூக்குரலையும்

www.uzairfalahi.com

கேட்ட விரோதிகள் அதிர்ச்சியடைந்தனர், தங்களுடைய தோல்வியை மூடி மறைக்க துன்புறுத்தும் செயலை மேலும் கடுமையானதாக ஆக்கினர். ஒரு மிகப்பெரிய சுட்டெரியும் பாறையைப் பலர் தூக்கிக் கொண்டுவந்து ஹஜ்ரத் பிலால் (ர) அவர்களுடைய மார்பின்மீது வைத்து ஹஜ்ரத் பிலால் (ர) அவர்களை தம்வழிக்குக் கொண்டுவரலாமெனத் தப்புக்கணக்குப் போட்டனர், ஆனால், தோற்றுவிட்டனர், இறுதியில் உண்மைதான் வென்றது, அவர்களுடைய பொய் தூள்தூளாகிவிட்டது.

ஒருவருடைய பாக்கியமும் வாழ்க்கையின் மகிழ்ச்சிகளும் அவனுடைய ஈமானில்தான் மறைந்திருக்கின்றன என்பதை நன்கறிந்தவர்களுள் ஹஜ்ரத் இமாம் அபூ ஹனீஃபாவும் (ரஹ்) ஒருவர். வெற்றியைப்பற்றிப் பிடிப்பதற்காக எதற்கு முன்னிரிமையளிப்பது என்ற சவால் அவருக்கும் ஏற்பட்டது. அவர்கள் உண்மையான வெற்றி அல்லாஹ்வின்மீது ஈமான் கொள்ளும் பாக்கியத்தைப்பெறுவதுதான் என்று அறிவித்தபோது மாற்றுக் கருத்துக்களையுடையவர்கள் தோல்வியடைந்துவிட்டதாக வேதனைக்குள்ளாயினர். அவருடைய இந்த அணுகுமுறையை மாற்றிக்கொள்ளும்படி நிர்ப்பந்தங்களும் கொடுமைகளும் இழைக்கப்பட்டபோது அவர்கள் கூறினார்கள், நீங்கள் என்னை எவ்வகையிலும் மாற்றிவிடமுடியாது, என்னுடைய சுவர்க்கம் என் இதயத்தில் பதிந்துவிட்டது, அதனை என்னைவிட்டு நீக்கிவிடமுடியாது, நீங்கள் விரும்பினால், என்னை நாடுகடத்தத்தான் முடியும், நானும் அதனைப் பல நாடுகளின் சுற்றுலா மேற்கொண்டுள்ளதாகவே கருதுவேன். நீங்கள் என்னைக் கைது செய்யலாம், நான் அதனையும் இறைவனைத் தியானிக்கும் வாய்ப்பாகவும் அதற்கான தனிமையின் வாய்ப்புக் கிடைத்துவிட்டதாகவும் கருதுவேன். நீங்கள் என்னைக் கொன்றும் விடலாம், அது எனக்கு ஷஹீதாகும் வாய்ப்பாகவே அமையும். ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள், என்னுடைய மார்பு அல்லாஹ்வின் வேதமான திருக்ஃகுர்ஆனின் களஞ்சியமாகவும் என்னுடைய இதயம் இறைத்தூதர் ﷺ அவர்களுடைய சுன்னத்துகளின் பொக்கிஷமாகவும் உள்ளது. என்னுடைய இந்த நற்பாக்கியத்தை நீங்கள் பரிக்கவே முடியாது என்று கூறினார்கள். ஒரு கவிஞன் உண்மையைதகதான் கூறியுள்ளான்:

وہ عالم سے کرتی ہے بیگانہ دل کو　　عجب چیز ہے لذت آشنائی

ஈமானின் இன்பத்தை அதன் ருசியினை அனுபவித்தவன் மட்டுமே உணர முடியும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

ذَاقَ طَعْمَ الْإِيمَانِ مَنْ رَضِيَ بِاللهِ رَبًّا، وَبِالْإِسْلَامِ دِينًا، وَبِمُحَمَّدٍ ﷺ رَسُولًا ِ مسلم)

www.uzairfalahi.com

ஈமானுடைய ருசியை யார் அல்லாஹ்வைத் தன் இரட்சகனாகவும் இஸ்லாத்தைத் தன் மார்க்கமாகவும் ஹஜ்ரத் முஹம்மத் ﷺ அவர்களை இறைத்தூதராகவும் மனதார ஏற்றுக்கொள்வார்களோ அவர்கள் மட்டுமே அடைய முடியும் (முஸ்லிம்).

மற்றொரு நபிமொழியில் இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

ثَلاَثٌ مَنْ كُنَّ فِيهِ وَجَدَ حَلاَوَةَ الإِيمَانِ: أَنْ يَكُونَ اللَّهُ وَرَسُولُهُ أَحَبَّ إِلَيْهِ مِمَّا سِوَاهُمَا، وَأَنْ يُحِبَّ الْمَرْءَ لاَ يُحِبُّهُ إِلَّا لِلَّهِ، وَأَنْ يَكْرَهَ أَنْ يَعُودَ فِي الكُفْرِ كَمَا يَكْرَهُ أَنْ يُقْذَفَ فِي النَّارِ متفق عليه)

எவருடைய மனதில் இந்த மூன்று சிறப்பம்சங்கள் பெறப்படுமோ அவர்கள் ஈமானுடைய இன்பத்தினைப்பெற்றுவிட்டார்கள்:

முதலாவது: அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதர் ﷺ இவ்விரண்டைத் தவிர அனைத்துப் படைப்புகளையும்விட அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் ﷺ பிரியமானவர்களாக இருக்கவேண்டும்.

இரண்டாவது: ஒருவன் எந்த ஒன்றை விரும்பினாலும் அதனை அல்லாஹ்வின் பொருத்தத்திற்காக மட்டுமே விரும்பவேண்டும்.

மூன்றாவது: ஈமான் கொண்டுவந்து இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டபின் அதனை நிராகரித்துத் திரும்பிவிடுவதை அவன் மீண்டும் தீயில் போடப்படுவதை விட அதிகமாக வெறுப்பவனாக இருக்கவேண்டும்.

சில பெரியார்கள் தங்களுடைய விரோதிகளைப்பற்றிக் கூறுகிறார்கள், அவர்களுக்கு நம்முடைய மனதில் எவ்வகையிலான ஈமான் வேரூன்றியிருக்கின்றது என்று தெரிந்துவிடுமானால், அவர்கள் எங்களோடு போர் தொடுக்கவும் தயாராகிவிடுவார்கள்.

யார் இவ்வுலகில் மகிழ்ச்சியான வாழ்க்கை மற்றும் பாக்கியங்களை விரும்புகிறார்களோ அவர்கள் தங்கள் மனங்களில் ஈமானை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

யார் மறுமையில் வெற்றியடையவேண்டும் என்று விரும்புகிறார்களோ அவர்கள் தங்கள தங்கள் மனங்களில் ஈமானை வேரூன்றச்செய்யவேண்டும்.

யார் பாதுகாப்பும் சமாதானமும் விரும்புகிறார்களோ அவர்கள் தங்களை ஈமான் கொண்டபின் அதன் அடிப்படைகளுக்குத் தம்மைக் கீழ்ப்படிந்து நடக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும்.

* * *

www.uzairfalahi.com